# வன்முறையை நிறுத்து!

## வீட்டில் இடம்பெறும் வன்முறையின்போது வெளியேற்றலும் பிரவேசத்தடையும் பற்றிய குடிசார்சட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான தகவல்கள்.

1. தை 2007இல் இருந்து Aargau மாநிலப் பொலிசாரால் வன்முறையைப் பிரயோகித்த நபர்களுக்கு வீட்டிலிருந்து வெளியேற்ற உத்தரவும் அவர்கள் வீட்டிற்கு 20 நாட்கள் வரை திரும்பிவராமல் இருக்க தடையும் விதிக்கலாம். அத்துடன் மீண்டும் தனிப்பட்ட குடும்ப சமூகச்சூழலிலும், திருமண வாழ்க்கைக்கும், இணைந்த இருவருக்கான உறவுக்கும் வன்முறையை தவிர்க்கலாம்.
பிரவேசத்தடை காலத்தில் வெளியேற்றப்பட்ட நபர் வீட்டிற்கும் அதேபோல் வீட்டுச் சுற்றுப்புறத்திற்கும் பிரவேசிக்க முடியாது. வீட்டிற்கு திரும்பி வருவதற்கு பாதிக்கப்பட்ட நபர் சம்மதித்தாலும் திரும்பி வரமுடியாது. வெளியேற்றப்பட்ட நபர் பிரவேசத்தடையை மீறினால் பணத்தண்டனை விதிக்கப்படும்.

### பாதிக்கப்பட்ட நபருக்கு:

பொலிஸ் தலையீட்டை தொடர்ந்து குடும்ப வன்முறைக்கு எதிரான உதவிநிலையம் (Anlaufstelle gegen häusliche Gewalt Aargau) உங்களுடன் தொடர்புகொண்டு உங்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு அத்துடன் பொருத்தமான துறைசார் நிலையத்திற்கு பரிந்துரை செய்வார்கள். இச்சேவைகள் கட்டணமற்றவை. குற்றசெயல்கள் காணப்பட்டால், பாதிக்கப்பட்டோருக்கான உதவி நிலையத்தில் உதவி கோருவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. இத்தால் நீங்கள் விருப்பப்படின் தங்ளது விபரங்களை நேரடியாக பாதிக்கப்பட்டோருக்கான உதவி நிலையத்திற்கு (Beratungsstelle Opferhilfe Aargau Solothurn) பொலிஸார் அனுப்பி வைப்பார். இந்த ஆலோசகர் பின்பு தங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி மேற்கொண்டு நடைபெறவேண்டியவற்றிற்கு உதவி செய்வர். பாதிக்கப்பட்டோருக்கான உதவி நிலையத்திற்கு உங்களாலும் தொடர்புகொள்ளமுடியும் (தொலைபேசி: 062 835 47 90). இவ் ஆலோசனையும் இலவசமானது. உங்களுக்கு பிரவேசத்தடை நீடிக்கவேண்டுமயின் மாவட்ட நீதிமன்றில் (Bezirksgericht) பாதுகாப்பு கோரி விண்ணப்பிப்பதற்கு பாதிக்கப்பட்டோருக்கான உதவி நிலையத்தில் இருந்து தகவல்தரப்படும். இவ்விண்ணப்பம் தடை விதித்த காலம் காலாவதியாகுமுன் விண்ணப்பித்தல் வேண்டும்.
வெறியேற்றப்பட்ட நபர் பிரவேசத்தடையை மீறினால் நீங்கள் உடனடியா பொலிஸாருக்கு தொலைபேசியில் தகவல் தெரிவிக்கலாம் (Polizei, தொலைபேசி: 117). வீட்டில் பாதுகாப்பு இன்மையை உணர்வீர்களானல் உங்களுக்கு சாத்தியமாயின் உறவினர்களிடமோ, நண்பர்களிடமோ அல்லது பின்வரும் ஏதாவதொரு அமைப்பிடமோ பாதுகாப்பு தேடலாம். Frauenhaus (மகளீர்காப்பகம: 062 823 86 00), ZwüscheHalt (079 558 85 79 பாதிக்கப்பட்ட ஆண்கள் மற்றும் பிள்ளைகளுக்கானது).

### வன்முறையில் ஈடுப்ட்ட நபருக்கு:

வன்முறையானது தீர்வாகாது. பொலிஸ் தலையீட்டை தொடர்ந்து குடும்ப வன்முறைக்கு எதிரான உதவிநிலையம் (Anlaufstelle gegen häusliche Gewalt Aargau) உங்களடன் தொடர்புகொண்டு உங்களை ஒரு சிறிய ஆலோனைக்கு அழைப்பர். எதிர்காலத்தில் வன்முறையை தவிர்ப்பதற்கு உங்களுக்கு எவ்வகை உதவி தேவைப்படும் என ஒரு துறைசார் நிபுணருடன் இணைந்து தெளிவுபடுத்தப்படும். அத்துடன் பொலிஸ் தலையீட்டிற்கு முன்னதாகவே நீங்கள் ஆலோசனை நிலையத்தை தொடர்புகொள்ள முடியும் (தொலைபேசி: 062 550 20 20). இச்சேவைகள் கட்டணமற்றவை, இரகசியமாக பேணப்படுபவை.
அது தவிர வன்முறையாளர் ஒரு கற்கை நிகழ்ச்சிநிரல் அல்லது தனியான வன்முறை ஆலோசனை கோரமுடியும். இவற்றிற்கு ஒரு சிறிய கட்டணம் அறவிடப்படும். குடும்ப வன்முறைக்கு எதிரான உதவி நிலையம் உங்களுக்கு இவற்றை கட்டணமின்றி அறியத்தருவார்கள். தேவையாயின் நீங்கள் விரும்பும் தெரிவை ஒழுங்கு செய்வார்கள். காலதாமதமாகமுன் நீங்களே உதவி கோருங்கள்.

### முகவரிகள்:

வீட்டில் இடம்பெறும் வன்முறைகளின்பால் வழங்கப்படும் முக்கிய உதவிகளின் விபரமடங்கலான முகவரி நிரலையும் இந்தப்பிரசுர இறுதியில் காணலாம்.